எங்கும் நிறைந்த இறையோனே
கருவுக்கள் எனை வைத்து வஜீபணம் தந்து நீ
காப்பற்றி இது வரைக்கும்
கண்பாரத்து வந்தெனைக் குள்ளாயிருந்து நீ
கவலையை வகுத்ததேனோ
எங்கும் நிறைந்த இறையோனே
என்முகம் பாராத்தேன்
பொங்கும் கருணை ரஹ்மானே

பேரருள் தராததேன்

ஏழு வானம் நீ படைத்தாயே

இன்ப பூமியை நீ படைத்தாயே

புதுமை வளங்கள் தந்தவன் நீயே

பேதம் நீக்கிடும் தூயோன் அல்லாவ்ஹவே

அற்புதமோங்கும் சொர்க்கமும் படைத்தாய்

அழிவை நாட்டும் நரகமும் படைத்தாய்

நற்பயன் நிறைந்த வாழ்வினைத் தாராய்

நாளும் காக்கும் தூயோன் அல்லாஹ்வே
நேர்வழி காட்டும் நபிகளைத் தந்தாய்
நிறையருள் மறையாம் குர்ஆனைத் தந்தாய்
ஆர்வமோடு இறைஞ்சுகின்றோமே
அல்லல் நீக்கும் தூயோன் அல்லாஹ்வே